## பகுதி - அ

1. நுண்ணிலைக் கற்பித்தல் என்றால் என்ன? பல்வகைத் தூண்டல் திறனை விளக்கு.

### நுண்ணிலைக் கற்பித்தல்.

ஒவ்வொரு திறனையும் தனிமைப்படுத்தி அதன் உட்கூறுகளையும் உணர்த்திப் பழக்குவிப்பதே நுண்ணிலைக் கற்பித்தல் ஆகும்.

நுண்ணிலைக் கற்பித்தல் என்பது வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை அளவு மற்றும் வகுப்பு நேரம் வரையறுக்கப்பட்ட ஒரு போதிக்கும் செயலைக் குறிக்கிறது.

### பல்வகைத் தூண்டல் திறன்

ஆர்வத்தை ஏற்படுத்தி வகுப்பில் மாணவர்களின் மனதை நிலைப்படுத்த செய்யப்படும் பல்வகைத் தூண்டல்களின் தொகுப்பே பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன் எனப்படும்.

### உட்கூறுகள்

1. இடமாற்றம்.
2. இடைவினை மாற்றம்.
3. கவனம் ஈர்த்தல்
4. சைகைகள்

Scanned by CamScanner

5. பேச்சு நிறுத்தம்:

6. குரல் ஏற்றத்தாழ்வு

7. புலன்வகை மாற்றம்.

1. இடமாற்றம்:

வகுப்பறைக்குள்ளேயே இடங்களை மாற்றி நின்று கற்பித்தல்.

2. இடைவினை மாற்றம்:-

ஆசிரியர் மாணவரோடு பேசுதல் அல்லது வினா எழுப்புதல், மாணவர்களுக்குள்ளேயே கலந்துரையாடுதல் மற்றும் மாணவர் ஒரு ஆசிரியரிடம் கலந்துரையாடுதல் என்ற மூன்று வகைகளில் இத்திறனை செயல்படுத்தலாம்.

3. கவனம் ஈர்த்தல்:-

"இந்த இடத்தில் நன்றாக கவனியுங்கள்" இது மிகவும் முக்கியமானக் கருத்து. "இந்த படத்தைப் பாருங்கள்" இதனைக் குறிக்கிறது போன்ற சொற்களால் பயன்படுத்தும் போது மாணவர்களின் கவனம் கற்றலின் திசைத் திருப்பப்படுகிறது.

4. சைகைகள்:-

உடலியக்கங்களின் வழியாக பாடப்பொருளை விளக்குதல்.

Scanned by CamScanner

ஆசிரியரின் இயக்கம் திட்டமிட்டு செயல்படக்கூடியதாக இருக்க வேண்டும். கலைச் சொற்கள், பாடங்கள், சூத்திரங்கள், விதிகள், இவற்றைக் கரும்பலகையில் எழுதும் போதும், வரையும் போதும் மாணவர்களின் செயல்பாடுகளை செய்து காட்ட மேசை அருகிலும் இடம்விட்டு இடம் நகர்தல் அவசியம். இவ்வியக்கம் சைகைகள் எனப்படும்.

## 5. பேச்சு நிறுத்தம்:

ஆசிரியர் தொடர்ந்து பேசும்பொழுது மாணவர்களிடம் சலிப்பு ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது. எனவே கற்பிக்கும் போது சிறிது நேரம் பேச்சை நிறுத்தினால் மாணவர்கள் அனைவரும் கவனிக்கத் தொடங்குவர். அந்த பேச்சு நிறுத்தம் 10-15 நொடிகள் நீடிக்கலாம்.

## 6. குரல் ஏற்றத்தாழ்வு:

ஒரே சீரான பேச்சு ஒலிப்பு ஆகியவை சலிப்பு தன்மையைத் தோற்றுவிக்கும் இதனால் கவனக்குறைவு ஏற்பட்டு கற்றல் தடைபடுகிறது. ஆகவே, பாடப் பொருளுக்கு ஏற்ப குரல் ஏற்றதாழ்வு மிகவும் அவசியம்.

Scanned by CamScanner

7. புலன்வகை மாற்றம் :

கற்பித்தலின் ஆசிரியர் பேசிக்கொண்டு இருந்தால் செவிப்புலன் மூலம் கற்றல் நிகழ்கிறது. கற்றல் உபகரணங்களை பயன்படுத்தும்போது கட்புலன் ஆகியவற்றை பயன்படுத்துவது மட்டும் அல்லாது முகர்தல், புலன் சுவைத்தல், புலன்தொடு ஆகியவை புலன் மாற்றம் எனப்படும்.

---

பகுதி - ஆ

2. விளக்குதல் திறன் என்றால் என்ன? விளக்குக.

உட்கூறுகள் :

* தொடங்கும் திறன்.
* தொடர் இணைப்புச் சொற்கள்.
* முக்கிய கருத்துக்களை பயன்படுத்தல்.
* மெய்ப்பாடுகள்.
* முற்றுவிக்கும் வாக்கியம்.

(1) தொடங்கும் திறன் :-

பாடம் தொடங்குவதற்கு முன் ஆசிரியர் அந்த ஆசிரியர் முன் கருத்தைப் பற்றிப் படிக்கப் போகிறோம் என்பதை முதலில் அறிவிக்க வேண்டும்.

Scanned by CamScanner

இது மாணவர்களை பாடவிளக்கத்திற்கு தயார் செய்து கொள்ள உதவுகிறது.

2. தொடர் இணைப்புச் சொற்களைப் பயன்படுத்தல் :-

இது அறிவுச்சார் தொடர் எனவும் அழைக்கப்படும், தொடர் வார்த்தைகளான ஆகையால், ஏனென்றால், இதனால், ஆகவே, எனவே, இதைப்போல் ........ போன்றவற்றை பயன்படுத்தி கருத்துகள், செயல்கள், ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தல் இதில் அடங்கும்.

3. முக்கியக் கருத்துக்களை பயன்படுத்தல் :-

பாடம் நடத்தும்போது அதில் உள்ள முக்கிய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எந்த ஒரு பாடத்தை நடத்தும்போதும் அதில் உள்ள முக்கிய கருத்துகளை பயன்படுத்தும் முறையை விளக்க வேண்டும்.

4. மெய்ப்பாடுகள் :-

மெய்ப்பாடுகள் மூலமாக ஆசிரியர் தான் விளக்கும் திறனை மேன்மேலும் மேம்படச் செய்யலாம். ஆசிரியர் தன் உடல் உறுப்புகளை அமைப்பதன் மூலம் நடைபெறும்.

Scanned by CamScanner

ஈ. தொகுக்கும் வாக்கியம்:

விளக்கத்தின் இறுதியில் ஆசிரியர் தான் கற்பித்த பாடத்தை சுருக்கமாக கூறி மாணவர்களின் மனதில் இருக்கும் கருத்தை வலுப்படுத்துதல் மிகவும் அவசியம்.

---

3. வலுவூட்டுதல் திறனை விளக்கி எழுதுக?

உட்கூறுகள்:

* உடன்பாட்டு மொழிசார் வலுவூட்டிகள்
* திரும்ப கூறுதலும் வேறுவகை கூறுதலும்
* அங்கீகரிப்படியான மொழிசார் வலுவூட்டிகள்
* உடன்பாட்டு மொழிசாரா வலுவூட்டிகள்
* மாணவரின் துலங்கல்களை கரும்பலகையில் எழுதல்.

1. உடன்பாட்டு மொழிசார் வலுவூட்டிகள்:-

நன்று போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதின் வழியாக மாணவரிடம் கற்றலில் ஆர்வத்தை உண்டாக்கலாம்.

2. திரும்பக் கூறுதலும் வேறுவகை கூறுதலும்:

ஆசிரியர் மாணவர்களிடம் கேள்வி கேட்கும் பொழுது ஏதாவது ஒரு மாணவர் சரியான பதில் கூறுவார். அந்த பதிலை அனைத்து மாணவர்களை சொல்ல செய்தல் திரும்ப கூறுதல் என்று பெயர்.

Scanned by CamScanner

3. அதிகப்படியான மொழிசார் வலுவூட்டிகள் :

நன்று, மிக நன்று போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதின் வழியாக மாணவரிடம் கற்றலில் ஆர்வத்தை உண்டாக்கலாம்.

4. உடன்பாடு மொழிசாரா வலுவூட்டிகள் :

ம்.ம், சொல்லுங்கள் என்று மாணவர்களிடம் இருந்து ஆசிரியர் விடையை வரவழைக்க ஆர்வத்தை உண்டாக்கலாம்.

5. மாணவரின் துலங்களை கரும்பலகையில் எழுதல் :

ஆசிரியர் கேட்கும் கேள்விக்கு மாணவர்கள் மிக துல்லியமான விடையை கூறும்போது, அந்த விடையை கரும்பலகையில் எழுதி உற்சாகப்படுத்துதல்.

---

4. கிளர்வினாத் திறனை விளக்கி எழுதவும்?

உட்கூறுகள் :

* எண்ணத் தூண்டல்
* மென்மேலும் செய்திகளை வரவழைத்தல்
* சிறுமையான விளக்கம் பெறுதல்
* திசை திருப்புதல்
* பாடம் பற்றிய விழிப்புணர்வு.

Scanned by CamScanner

1. எண்ணைத் தூண்டல்:

ஆசிரியர் மாணவர்களிடம் வினாக்கள் கேட்கும்போது மாணவர்கள் விடை கூறாமல் இருக்கும்போது ஆசிரியர் ஒத்த நிகழ்வுகள் சிறு குறிப்புகள் அல்லது தொடர்புடைய தகவல்களை கூறி அவர்களது எண்ணத்தை தூண்டி உரியப் பதிலை மாணவர்களை கூறச் செய்தல் ஆகும்.

2. மென்மேலும் செய்திகளை வரவழைத்தல்:-

ஆசிரியர் எதிர்பார்த்த விடையை மாணவர்கள் முழுமையாகத் தராதபோது ஆசிரியர் மென்மேலும் சிறு வினாக்கள் கேட்டு மாணவர்களிடம் தான் எதிர்பார்க்கும் விடையை வரவழைத்தல் ஆகும்.

3. முறையான விளக்கம் பெறுதல்:-

மாணவர்களுக்கு தெரிந்த வேறொரு சூழ்நிலையில் சொல்லி அதை தற்போதைய சூழலுடன் பொருத்திப் பார்த்து விடையளிக்கச் செய்தல், தொடர்புபடுத்தும் நிகழ்வு ஏற்கனவே கற்பித்த பாடமாக இருக்கலாம்.

4. வினா திசை திருப்புதல்:-

ஆசிரியர் ஒரு மாணவரிடம் கேட்ட வினாக்களையே மற்ற மாணவர்களிடம் கேட்க வேண்டும்.

Scanned by CamScanner

கேட்ட வினாக்கள் புரியாமல் மாணவர் விழிக்கும்போது வேறுவிதமாக மாற்றிக் கேட்க வேண்டும்.

5. பாடம் பற்றிய மதிப்புணர்வு :-

மாணவன் ஒரு விடையை கூறியவுடன் ஏன்? அவ்வாறு சொல்கிறாய்? எப்படி? எதற்கு? போன்ற மேலும் சில வினாக்களை கேட்டு மாணவர்களை சிந்திக்க வைத்தல், விடைக்கான காரணத்தை அறியச் செய்தல்.

---

5. கரும்பலகைத் திறனை விளக்கி எழுதவும்?

உட்கூறுகள் :

* தெளிவாக எழுதுதல்.
* அழகாக எழுதுதல்.
* பொருத்தமானவற்றை எழுதுதல்.

1. தெளிவாக எழுதுதல்

கரும்பலகையில் எழுதும் சமயங்களில் தெளிவாகவும், வார்த்தைகளை மற்றும் எழுத்துகளின் இடையில் சீரான இடைவெளி அமைத்தும் எழுதுதல் அவசியம்.

Scanned by CamScanner

2. அழகாக எழுதுதல்:

கரும்பலகையில் எழுதுவதை அழகாக எழுதல் (cover writing) மற்றும் தொடர்ச்சியான முறையில் வார்த்தைகளை அமைத்தல் போன்ற வேலைகளைத் தவிர்க்க வேண்டும்.

3. பொருத்தமானவற்றை எழுதுதல்:

பாடத்தோடு தொடர்புடையவற்றை எழுதுதல் அவசியம்.


இந்தியா போன்ற வளரும் நாடுகளில், குறிப்பாக கற்பித்தலுக்கு பயன்படும் தகவல் தொடர்பு சாதனங்களின் வசதி குறைவாக காணப்படும் நாடுகளில், கரும்பலகையை கற்பித்தலுக்கு பயன்படுத்தல் அவசியம் வாய்ந்த மற்றும் முக்கியத்துவம் நிறைந்த செயலாகக் கருதப்படுகிறது. சிறப்பான முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர், கரும்பலகையை பயன்படுத்தும் முறைகளிலும் மிகுந்த திறனுடையவராயிருப்பார். கரும்பலகையை முறையாக பயன்படுத்துவது, கீழ்வரும் நோக்கங்களில் வெற்றியடைய உதவுகின்றது.

* வகுப்பறையில் கற்பிக்கப்படும் பாடப் பகுதிகளைத் தெளிவாக அறிந்து கொள்ள உதவுகின்றது.

## பகுதி - இ

6. நுண்ணிலைக் கற்பித்தல் சுழற்சி வரைக?

### நுண்ணிலைக் கற்பித்தலின் சுழற்சி




Scanned by CamScanner

1. ஆலன், ராயன் குறிப்பிடும் திறன்கள் யாவை?

14 திறன்கள் :-

* பல்வகைத் தூண்டல் திறன்.
* பாடம் தொடங்குதல் திறன்
* பாடம் முடித்தல் திறன்.
* மௌனமும் மொழிசாராப் பரிவும்.
* மாணவர் பங்கேற்பை வலியுறுத்தல்.
* வினா கேட்டல் சரளமுடைமை
* கிளர் வினாக்கள்.
* உயர்நிலை வினாக்கள்
* விரிசிந்தனையைத் தூண்டும் வினாக்கள்.
* கவனிக்கும் நடத்தைகளை அறிதல்
* எடுத்துக்காட்டுகள் பயன்படுத்துதல்
* சொற்பொழிவு
* திட்டமிட்டு மீண்டும் கூறல்
* செய்தி இணைப்பு நிறைவுபெறல்.
*

8. நுண்ணிலைக் கற்பித்தல் திறன் வரையறை?

விளக்கங்கள் மூலமும், செயல்முறைகள் மூலமும் நுண்ணிலை கற்பித்தல் திறனை கீழ்வருமாறு வரையறுக்கலாம்.

நுண்ணிலைக் கற்பித்தல் என்பது ஏதேனும் ஒரு கற்பித்தல் திறனில் பயிற்சி பெறும் பொருட்டு, மிகச்சிறிய பாடப்பகுதியினைத் தேர்ந்தெடுத்து, தன்னை ஒத்த வயதுடைய நண்பர்கள் சிறுநிலையில் (சுமார் 5 முதல் 6 நபர்கள்), குறுகிய கால அளவில் (சுமார் 5 முதல் 6 நிமிடங்கள்) கற்பித்தல் திறனில் பயிற்சி பெற வாய்ப்பளிக்கும் செயலாகும்.

---

9. பல்வகைத் தூண்டல் திறன் உட்கூறுகளை பட்டியலிடுக.

உட்கூறுகள் :

* இடமாற்றம்.
* இடைவினைமாற்றம்
* கவனம் ஈர்த்தல்
* சைகைகள்
* பேச்சு நிறுத்தம்
* குரல் ஏற்றத்தாழ்வு
* புலன்வகை மாற்றம்.

Scanned by CamScanner

10. பாடம் தொடங்கும் திறனை விளக்குக?

இத்திறனை கற்பித்தல் தொடங்குவதற்கு முன் பயன்படுத்தப்படும் திறனாகும். மாணவர்களின் கவனத்தை பாடப் பகுதியின் மீது ஈர்ப்பதற்காக இத்திறன் பயன்படுத்தப்படுகிறது. பாடப்பொருளைப் பற்றி மாணவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள அறிவை மீட்கொணர்தலே இத்திறனைச் செயல்படுத்துவதின் முக்கிய நோக்கமாகும்.

ஆசிரியர் கதைகளை கூறுவதன் மூலமாகவோ அல்லது பாடத்தோடு தொடர்புடைய தகவல்களை கூறுவதன் வழியாகவோ மாணவர்களுக்குப் பாடப் பொருளின் மீது ஈர்ப்பினை உண்டாக்கி, பாடத்தினை கற்பிக்க தொடங்குவதே : பாடத்தினை தொடங்கும் திறன் என்றழைக்கப்படுகிறது.

Scanned by CamScanner